12.12.2023. Letter of Administration O.P.No.58 of 2021

P.W.1 - Venkatesan

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

1 மற்றும் 4 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் குறுக்கு விசாரணை

இவ்வழக்கை, சொத்தை நிர்வகிப்பதற்காக தாக்கல் செய்தேன். 4 ம் எதிர்மனுதாரரை எதற்காக இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தேன் என்றால் 3 ம் எதிர்மனுதாரர் எனக்கு எதிராக நிலஅபகரிப்பில் புகார் கொடுத்ததால் அந்த காவல் அதிகாரியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்த்தேன். 4 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக எந்தஒரு நிவாரணமும் வழக்கில் கோரவில்லை.

4 ம் எதிர்மனுதாரர், 3 ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்துக்கொண்டு பொய்யாக ஆவணம் தயாரித்தார் என்று நான் சொல்லியதற்கு காரணம் ஒரு பொய் உயில் ஆவணம் அவர் தயாரித்தார். எனவே நான் அவ்வாறு சொல்லியுள்ளேன்.அதற்கான சங்கதியை மனுவில் சொல்லியுள்ளேன். அதற்கான அத்தாட்சியும் மனுவில் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு மனுவில் எதுவும் சொல்லவில்லை என்றும், புகார் கொடுத்ததின் அடிப்படையில் தான் 4 ம் எதிர்மனுதாரர் என்னை விசாரித்தார் என்றால் சரியல்ல.

மனுச் சொத்திற்கு அரசாங்க வரி பாக்கி எதுவும் இல்லை. ஏதாவது வரி வசூல் பாக்கி இருந்தால் கட்ட தயாராக இருக்கிறேன். இதுநாள்வரை வழக்கு சொத்தை நான்தான் பராமரித்து வருகிறேன் என்பதற்கு வருவாய் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. சொத்தின்

வரவு, செலவை வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனவே வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

உயில் எழுதிய உதயகுமாருக்கு, 3ம் எதிர்மனுதார் தங்கையாவார். இறந்து போன உதயகுமார் என்னுடைய அண்ணன் மகன். 2ம் எதிர்மனுதாரர் ரவியிடம், இறந்து போன உதயகுமார் நான்கு கடனுறுதிச் சீட்டு எழுதிக்கொடுத்து ரூ.30 லட்சம் வட்டிக்கு கடன் பெற்றுள்ளார். கடன் வாங்கிய பின்னர் உதயகுமார் 2019ல் காலமானார். உதயகுமாருக்கு திருமணம் ஆகவில்லை. 3ம் எதிர்மனுதாரர் தங்கை மட்டும் தான் வாரிசு ஆவார்.

மேற்படி 2ம் எதிர்மனுதாரர் இறந்து போன உதயகுமாருக்கு கொடுத்த பணத்தை திரும்ப பெறுவதற்கு 3ம் எதிர்மனுதாரருக்கு எதிராக அசல் வழக்கு எண்.93/2020 என்ற வழக்கை கூடுதல் மாவட்ட நீதிபதி, விரைவு நீதிமன்றம், வேலூரில் வழக்கு தாக்கல் செய்தார். அந்த வழக்கு தீர்ப்பாகிவிட்டது. அந்த வழக்கில் உதயகுமாரின் சொத்தின் மேல் அவர் வாங்கிய கடனை வசூல் செய்யலாம் என தீர்ப்பானது. எனவே இந்த வழக்கில் கண்ட சொத்தின் மேல் 2ம் எதிர்மனுதாரர் அவருக்குண்டான பணத்தை வசூல் செய்துக்கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான்.

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

**அ.வ.எண்.93/2020 எந்த நீதிமன்றத்தில், எப்போது தீர்ப்பானது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களான 18 கடை, ஒரு பழைய வீடும், ஒரு புதிய வீடும் உள்ளது. மற்றும் விவசாய நிலம் உள்ளன. அந்த சொத்தில் நான்தான் சுவாதீனத்தில் உள்ளேன். சொத்தின் மதிப்பு ரூ.50 லட்சம் என்பதற்கு அரசு வழிக்காட்டு மதிப்பையோ, சந்தை மதிப்பையோ தாக்கல் செய்யவில்லை.**

**வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

Sd/- Dr.P. Murugan,
Principal District Judge,
Vellore.

**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.2**
**Letter of Administration O.P.No.58 of 2021**

| | | |
|---|---|---|
| **Name** | : | **Boopathy** |
| **Father/Husband Name** | : | **C.**சுப்பிரமணி |
| **Village** | : | கள்ளூர் |
| **Taluk** | : | குடியாத்தம் தாலுக்கா |
| **Caste** | : | |
| **Calling/Occupation** | : | கூலி |
| **Religion** | : | இந்து |
| **Age** | : | **66** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.12.2023.**

**முதல் விசாரணை**

**நான் மனுதாரர் தரப்பு சாட்சி 2 ஆவேன். என் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். என் தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.**

**ம.சா.ஆ.5 ல் இறந்து போன உதயகுமார் ஒவ்வொரு பக்கத்திலும் கையொப்பம் செய்துள்ளார். ம.சா.ஆ.5 ல் முதலாவது சாட்சியாக நான் கையொப்பம் செய்துள்ளேன். ம.சா.ஆ.5 ல் உள்ள என்னுடைய முதல் கையொப்பம் ம.சா.ஆ.21 ஆகும். மற்றொரு சாட்சியாக திரு.உதயகுமார் சாட்சி கையொப்பம் போட்டார். அது உயில் ஆவணம். திரு.கோபி, வழக்கறிஞர் உயில் சாசனத்தை எழுதினார்.**

**உதயகுமார் என்பவர், வெங்கடேசனுக்கு உயில் எழுதினார்.**

1, 4 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை

வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- Dr.P. Murugan,
Principal District Judge,
Vellore.

**In the Court of the Principal District Judge, Vellore District.**
**Deposition of Witness for P.W.3**
**Letter of Administration O.P.No.58 of 2021**

| | | |
|---|---|---|
| **Name** | : | உதயகுமார் |
| **Father/Husband Name** | : | சந்திரன் |
| **Village** | : | **R.**கிருஷ்ணபுரம் |
| **Taluk** | : | குடியாத்தம் |
| **Caste** | : | |
| **Calling/Occupation** | : | விவசாயம் |
| **Religion** | : | இந்து |
| **Age** | : | **43** |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 12.12.2023.**

முதல் விசாரணை

நான் மனுதாரரர் தரப்பு சாட்சி 3 ஆவேன். என் தரப்பில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன்.

இறந்து போன உதயகுமார் என்னுடைய மைத்துனர் ஆவார். மனுதாரர் வெங்கடேசன் எனது மாமா ஆவார். உதயகுமார், வெங்கடேசனுக்கு உயில் எழுதினார். அந்த உயிலுக்கு நானும், பூபதியும் சாட்சி கையெழுத்து போட்டோம். உயிலில் நான் 2 வதுஆக சாட்சி கையொப்பம் போட்டேன். அந்த கையொப்பம் ம.சா.ஆ.22. திரு.கோபி, வழக்கறிஞர் மூலம் உயில் தயாரிக்கப்பட்டது.

1, 4 மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை.

3 ம் எதிர்மனுதார் தரப்பில் குறுக்கு விசாரணை

வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- Dr.P. Murugan,
Principal Sessions Judge,
Vellore.